RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2510

OPEN ACCESS

# புறநானூற்றில் போர் அழிவுகளும் பண்பாட்டு பதிவுகளும்

இரா. கற்பகவள்ளி [அ, *], மு. கவிதா [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா

# War Devastation and Cultural Inscriptions in Purananooru

R. Karpagavalli [a, *], M. Kavitha [a]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for women Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author:
kayalshanker@gmail.com

Received: 15-08-2022
Revised: 19-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Purananooru literature is a legendary and heroic literature of tamils. Valor and war were paramount during the sangam period. Those who are full of valor are privileged. This literature deals with tradition and ideology. The so- called global war news has gained the attention of the world. It has been over four hundred years since were given the motto “Yadhum Ure Yavarum Kelir” palanthamil literature is the proof that our Tamils lived as people who were unparalleled in love and character. The war system of the sangha period was when one king invaded and waged war against another king considering the wealth of his country. Ethical Basis for War Crimes among nations today are noteworthy. Battlegrounds show methods of warfare extolled in sangha literature. There is no evidence so far of any maipractice in sangh Boreal news. The aim of this article is to see the destruction of war and its cultural records in Purananooru.

**Keywords:** Virture, Crime, Murder, Forgetfulness, War Forgetfulness, Brutality, Methods of War

## முன்னுரை

புறநானூறு என்னும் மாபெரும் இலக்கியமானது தமிழர்களின் திறத்தையும் நேரிய சிந்தனைகளையும் மற்றும் போரினால் ஏற்படும் அழிவினையும் பறைசாற்றுகின்றது. அரசர்கள் மக்கள், புலவர்கள் என்னும் இந்த மூன்று பாலத்தையும் முறையே இணைக்கின்றது. உறவினையும் பகைமையும் முறையாக கையாண்ட சமூகமாய் பண்டை சமூகம் விளங்குகின்றது. ஒருவரையொருவர் எதிர்த்து போரிடுவது இவ்வுலகத்து இயற்கை என்றாலும் அடுதலும் தொலைதலும் கொண்டாடும் சிறப்பாக நிகழ்ந்த சமுதாயமாக புறநானூற்று சமூகம் விளங்குகின்றது. பரந்து விரிந்த பலதரப்பட்ட இவ்வுலகில் மாற்றாரை மாற்றழிக்க வல்லவனுக்கும் நண்பனை தக்கவாறு போற்றுதலுக்கும் பெரிய வேறுபாடு ஒன்றுமில்லை. நம் சங்க நூல்கள் நேரிய முறையில் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இலக்கியங்கள் குறிப்பாக போர் பற்றிய செய்திகளை அதிகமாக பாடும் புறநானூற்றுப் பகுதியும் சேர மன்னர்களின் புகழ்பாடும் பதிற்றுப்பத்தும் தமிழ் இலக்கிய களத்தை செம்மைப்படுத்துகிறது. கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி என்று விளங்கும் தமிழ்குடி வீரம் விளைந்த விளையவும் வைத்த மறக்குடியாக விளங்குவதில் நம் தமிழ்ச் சமூகத்திற்கு என்றும் பெருமையே ஆகும்.

## போர்க்களவீரம்

போர்க்களத்தில் போரிடும் வீரம் வேண்டி நம் தமிழர்களின் உயிரை வேண்டாதவராய் பொருது விழுந்தனர். அவர்களை கல்லில் நட்டு கடவுளாய் போற்றினர். சங்க காலத்தில் வாழ்ந்த பெண்கள் வீரம் பெற்றவர்களாக இருந்தனர். அப்பெண்கள் தங்கள் கணவன், மகன், சகோதரன் என அனைவரையுமே போருக்கு அனுப்பி வைத்தனர். பசு, பார்ப்பனர், பெண்டிர், பிணியாளர், மூத்தோர், குழந்தைகள், பிள்ளை பேரில்லா ஆடவர் இவர்களை பாதுகாத்தனர். படைவீரர்களுடன் மட்டுமே போர் புரியும் முறை நம் தமிழர்களிடையே இருந்தது. இதனை,

"ஆவும் ஆண் இயற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்

எம்கோ வாழிய குடுமி நம் கோச்" (Auvai Duraisaamy Pillai, 2008)

பசு முதலிய அனைத்தையும் காப்பது அரசன் கடமையாகும். மாற்றரசனாயினம் முன் அறிவிப்பின்றி போர்புரிய மாட்டார். போரால் அவைகள் இடையே ஒரு அடையாதிருக்குமாறு கூறினான். உலகிலேயே போரில் கூட அறம் கண்ட வீரர்கள் நம் தமிழர்களே ஆவர். அதுமட்டுமின்றி புறங்காட்டு பவனை கூட கொல்ல மாட்டார்கள். நாகரீகம் பேணி நடப்பர், என்பதனை பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி நெட்டிமையார் பாடிய பாடல் மூலம் அறிய முடிகிறது.

## வேந்தர் வீரம்

மன்னனுக்கு படைவீரர்களே உடல் போன்றதாகும். பாண்டிய மன்னரையும் படைவீரர்களையும் பெரும்புலவர் பாராட்டி கூறுவதாவது,

"நின் நாடு கொன்று மூத்த உயிரினும் உயிரொடு

நின்று மூத்த யாக்கை யன்ன நின்

ஆடுகொடி மூத்த விழுதினை சிறந்த

வாளின் வாழ்நர் தாள் வலம் வாழ்த்த"

என்பதாகும் (Auvai Duraisaamy Pillai, 2008). அதாவது உன்னுடைய மூத்த உயிரைவிட, உயிருடன் விலங்கி முதிர்ந்த உடலைப் போன்றது உன்னுடைய வெற்றியினை உடைய குடி. அக்கொடியின் பழமையையும் சிறப்பினையுடைய குலத்தில் பிறந்த வாட்போர் வல்லவர் உன் முயற்சியின் வலிமையை வாழ்த்தட்டும். இரவலர்கள் உன் கொடையின் சிறப்பினை புகழட்டும். மகிழ்ச்சி நிறைந்த வல்ல வரையே உலகத்தை அறிந்து வாழ்த்துவர் என மாங்குடி கிழார் பாடிய பாடலின் வழி அறிய முடிகிறது. மேலும் செங்குட்டுவயும் அவனுக்கு உடம்பாக விளங்கிய சேனையையும் அரசர் பெருமானது திருமேனியாக விளங்கும் சேனா முகம் வாழ்க! என வாழ்த்தியவன் பறையரைவோன் என இளங்கோவடிகள்கூறுகிறார்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் வீரத்தையும், எண்ணியது முடிக்கும் திறம் அவன் படையின் சிறப்பினையும் குறித்து,

"வரை புரையும் மழ களிற்றின் மிசை

வான் துடைக்கும் வகைய போல

விரவு உருவின கொடி நுடங்கும்

வியன் தானை விறல் வேந்தே!" (Auvai Duraisaamy Pillai, 2008)

பரந்த படைகளை உடைய வெற்றிவேந்தனே! நீ சினந்து பார்க்குமிடம் தீப்பற்றும். நீ செம்மையான ஞாயிற்று நிலவு உண்டாக்க வேண்டினாலும் வெண்மையான நிலவிடம் வெயிலை

உண்டாக்க வேண்டினாலும் வேண்டியதை உருவாக்கும் வலிமை உடையவன் என மூலங்கிழார் மன்னரின் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

## ஆரிய மன்னரின் அச்சம்

தமிழ் மன்னர்களின் ஆற்றல், போர்த்திறம், போர் விரும்பும் தமிழ் வீரர் தம், ஊக்கம் கண்டு ஆரிய மன்னர்கள் தங்கள் நாட்டின் மீது தமிழ் படை கூடும் என எண்ணி உறக்கமின்றி வருந்தினர் என்பதை,

"வலமுறை வருதலும் உண்டு என்று அலமந்து

நெஞ்சு நடுங்கு அவலம் பாய,

துஞ்சாக் கண்ண வட புலத்து அரசே" (Auvai Duraisaamy Pillai, 2008)

மேலும் புலி எழுந்தது போல மாறன் வழுதி போர் செய்ய எழுந்ததால் வடபுல மன்னர் தன் நிலையை எண்ணி வருந்தினர் என்பதை மருதன் இளநாகனார் புறநானூற்றில் 52வது பாடல் குறிப்பிடுகிறார்.

## போர்க் கருவிகளின் நிலை

சங்கத்தமிழ் வேந்தர் தம் போர்க்கருவிகளை போர் முடிந்த பின்னர் பொலிவிழந்து பழுதடைந்து இருந்ததை செம்மை செய்ய கொலை களத்திற்கு அனுப்பி வைத்தனர் என்பதனை,

"பகைவர்க் குத்தி கோடு நுதி சிதைந்து

கொள் துறை குற்றமாதோ - என்றும்" (Auvai Duraisaamy Pillai, 2008)

என்ற வரிகளில் அதியமான் நெடுமான் அஞ்சியை அவ்வையார் பாடிய பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

## பகை நாடு அழித்தல்

தமிழ் மன்னர் தம் பகை மன்னர் மீது போர் புரிந்தபோது பகைவரை அழித்து அவர்களது குடையும் முரசும் கைக்கொண்டனர் இதனை,

"தென்னம் பொருப்பன் நல் நன்னாட்டு உள்ளும்,

ஏஎழ் உயிர் கதவம் அறிந்து கைக்கொண்டு நின்

பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை" (Auvai Duraisaamy Pillai, 2008)

என்று பகைநாடு அழித்தலைப் பற்றி இப்பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது.

## அடையாளச் சின்னம்

பேராற்றலை உடைய கில்லிவளவன் பகைவரை வென்று அங்கு தம் இலச்சினையை பொரித்தனர்.

"அடு களத்து உயர்க நும் வேலே கொடுவரிக்

கோன்மாக் குயின்ற சேண்விளங்கு கொடு பொரி

நெடு நீர் கொண்டை யோடு பொறித்த" (Auvai Duraisaamy Pillai, 2008)

இருபெரு சினத்தால் பகைவர் நாடுகள் அவர்கள் படும் என்பதை புலி பொழியும் பொறிக்கப்பட்ட சிகரங்களை உடையவன் ஆகும் என்பதை காவிரிப்பூம்பட்டினத்து காரிக்கண்ணனார் பாடல் வழி தெளியலாம்.

## மேலாண்மையும் நிர்வாகமும்

வீரத்தையும் காதலையும் சங்ககால மக்கள் தம் இரு கண்களாக கொண்டனர். எனவேதான் சங்க இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. காதலை அகநூல்கள் கூறுகின்றது வீரத்தை ஒரு நூல்கள் எடுத்துரைக்கின்றன எனினும் அகநூல்களில் புறச் செய்திகள் உலகச் செய்திகளும் கலந்து வருவதை காணமுடிகிறது. சங்ககாலம் என்றதுமே தமிழர்களின் வீரமும் போரும் நினைவிற்கு வருகிறது எனினும் போரினால் விளையும் துன்பங்களை எடுத்துக்கூறி போர்களை தடுப்பதற்குரிய வழிமுறைகளையும் கட்டாயமாக போர் செய்ய வேண்டிய சூழல்களில் பொது மக்களுக்கு துன்பம் ஏற்படாதவாறு அவர்களைப் பாதுகாத்த சங்ககால மக்களின் நிர்வாக திறமையும் புறநானூறு பதிவாகியுள்ளன.

## போரும் காரணங்களும்

போர் என்றவுடனே நமது நினைவிற்கு வருவது போரின் அழிவும் அதனால் மக்களுக்கு ஏற்படும் துன்பமும்தான். மனித குலம் தோன்றிய காலம் முதல் இன்று வரை போராட்ட உணர்வு மேலோங்கியே வந்திருக்கின்றது. மறவனின் போர் விருப்பமும் உடல் தினவும் வழிவழியாகப் போர் செயத்துண்டுவதாக அமைந்தன.போரையே தொழிலாகவும் போர்க்கள சுவையே புகழுக்குரியதாகவும் தமிழர் விரும்பினர்.சங்க கால வீரத்தாயும் தன்மகன் போர் செய்வதையே பெருமையாகக் கருதினாள். சான்றாக,

"புலிசேர்ந்து போகிய கல்லளை போல

ஈன்ற வயிரோ விதுவே

தோன்றுவதன்மாதோ போர்க்களத் தானே" (Auvai Duraisaamy Pillai, 2008)

என்ற பாடல் உணர்த்துகின்றது. மேலும் பண்டைய தமிழர் போர் வேறார்களாக இருப்பதையும் போரில் களிறுகளை வீழ்த்துவத்தையும் பெருமைக்குரிய செயல்களாக கருதினார்.

## போர் செய்யும் முறை

சங்க காலத்தில் நிகழ்ந்த போர் முறைகளைத் தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது. பழங்காலத்தில் ஐந்து நிலைகளில் போர் நிகழ்ந்துள்ளதை தொல்காப்பியம் சுட்டுகிறது. இவ்வைந்து நிலைகளில் போர் புரியும் போதும் மன்னர்கள் ஐந்து வகையான பூக்களை அணிந்திருந்தனர். ஆநிறைகளை கவர்வதே போரின் தொடக்கமாகும். ஆநிறையை கவர்வதற்கு வீரர்கள் வெட்சி பூ சூடுவார். ஆநிறைகளை மீட்க வருவோர் கரந்தைப் பூச்சூடுவர். கோட்டையில் நின்று போர் செய்வோர் உழிஞைப் பூச்சூடுவர். கோட்டையை முற்றுகை இடுதலைத் தவிர்ப்பதற்கு நொச்சிப்பூ சூடுவர். அதுமட்டுமல்லாது இரு பெரும் வேந்தர்களும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று போர் புரிவர். இதற்கு தும்பைச் சூடுவர்.

## போரால் ஏற்படும் துன்பம்

போரினால் மக்கள் பல துன்பத்திற்கு ஆளானதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றது. போர்க்களத்தில் பிணங்கள் எங்கும் கிடக்கும் தோற்றம் தச்சனின் உலைக்களத்தில் கிடக்கும். கருவிகளைப் போன்றிருந்தது என்னும் வீரர்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டதால் அவர்கள் உடலிலிருந்து சொட்டு சொட்டாக குருதி ஒழுகும் காட்சி கார்த்திகை விழாவில் வரிசையாக

வைக்கப்பட்டுள்ள கார்த்திகை விளக்கு போன்று இருந்தது. யானைகள் போர்க்களத்தில் கிடக்கும் காட்சி குன்றுகளை போலிருந்தது.

## முடிவுரை

சங்ககால தமிழ் வேந்தர்கள் அறத்தின் பாற்பட்ட போரியல் நெறியில் வழுவாது போர் புரிந்து வெற்றி பெருமிதத்தோடும் போர் மறவர் வெற்றி புகழ் கொண்டும் வாழ்ந்தனர். மன்னர்கள் அறப்போர் வீரம் போர் கருவிகள் ஓர் ஆற்றல் போர் முறை செயல்கள் அழித்தல் அடையாளச் சின்னம் பொரித்தல் போன்றவற்றால் சங்ககால மன்னர்களுடைய போர் ஆற்றல்களை அறிந்துக்கொள்ள சங்கநூல்கள் துணைபுரிகின்றன. சங்க கால போர் முறைக்கும் இக்கால போர் முறைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. நேருக்கு நேர் நின்று அறநெறிப்படி போர் செய்தனர். புறநானூற்றில் போர் அழிவுகளும் பண்பாட்டு பதிவுகளையும் இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

## References

Auvai Duraisaamy Pillai, (2008) Puranaanooru Moolamum Uraiyum, Tamil Mann Padhippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License